# ஆலோசனை நிலையங்கள்

சில ஆலோசனை நிலையங்கள் பொதுவான கேள்விகளுக்குப் பதிலளிக்கும் சமயம் மற்றைய நிலையங்கள் குறிப்பிட்ட தலைப்புக்கு அல்லது வாழ்வின் பிரச்சனைகளுக்கு மட்டுமே நிபுணத்துவம் பெற்றிருப்பார்கள். இந்த வசதி வாய்ப்புகள் வாழும் பிரதேசத்திற்கேற்ப மாறுபடும் வழமையாக முதலாவது ஆலோசனை இலவசமானது. அதிகமாகத் தொடர்ந்தும் இலவசமாகலாம். அதிகமான இடங்களில் வெளிநாட்டு மொழிகளிலும் ஆலோசனை பெறலாம்.

## பொதுவான ஆலோசனை நிலையங்கள்

அறோவிலுள்ள Anlaufstelle Integration Aargau (AIA) வெளிநாட்டவர்களுக்கான மத்திய ஆலோசனை நிலையமாகும். இங்கு வேலை செய்பவர்கள் தினமும் எந்நேரமும் பொதுவான கேள்விகளுக்குப் பதிலளிப்பதுடன் அவர்களுக்குத் தேவையான விசேட ஆலோசனை நிலையங்களைத் தேடிக் கொடுப்பார்கள். அதைவிட தேடுபவர்களுக்குப் பொருத்தமான டொச்மொழி வகுப்புகளையும் உள்வாங்குதல் வசதிவாய்ப்புகளையும் செய்து கொடுப்பார்கள். முதலே பேசி உடன்பட்டால் (தொலைபேசி அல்லது நேரடியாக ) வேற்றுமொழிகளிலும் பேசலாம். முன் அறிவித்தலின்றியும் நேரடியாகப் போய் ஆரம்பத் தகவல்களையும் பெற்று தேவையாயின் ஒரு சந்திப்பிற்கான நேரத்தைப் பெற்றுக் கொள்ளலாம். தகவல்களும் ஆலோசனையும் இலவசம். இதைவிட பொதுவான ஆலோசனை நிலையம், இவ்வாலோசனைகள் குறிப்பிட்ட பிறமொழியில் நடைபெறும் அல்லது குறிப்பிட்ட வாழிடப்பிரிவுக்கு பொறுப்பானதாக இருக்கும். வதியும் கிராமசபைப்பிரிவு அல்லது (Anlaufstelle Integration Aargau AIA) இல் இதுபோன்ற ஆலோசனை நிலையத்திற்கு செல்லலாம். இதைவிட வெளிநாட்டினர் கழகங்களும், முதலாவது தகவல்களை சொந்த மொழியில் வழங்குவதால் ஒரு நல்ல இடமாக உள்ளது.

## கிராமசபை நிர்வாகம் / நகரசபை நிர்வாகம்

அதிகமான சந்தர்ப்பங்களில் வதிவிடங்களின் நிர்வாகங்களே (கிராமசபை நிர்வாகம், Gemeindeverwaltung / நகரசபை நிர்வாகம், Stadtverwaltung) முதலாவது சிறந்த தொடக்க நிலையமாகும். இங்கு வேலைசெய்பவர்கள் பெரும்பாலான கேள்விகளுக்கு நேரடியாகப் பதில் தருவார்கள் அல்லது அதற்கென உள்ள ஆலோசனை நிலையத்திற்குப் பரிந்துரை செய்வார்கள். அறோ மாநிலத்திலுள்ள அனைத்துக் கிராமசபைகளுக்கும் சொந்தமாக ஒரு இணையத்தளம் உண்டு. அதில் தொடர்பு விபரங்கள் திறந்திருக்கும் நேரங்களும் மேலதிக தகவல்களும் ஆலோசனை மற்றும் உள்வாங்குதல் சம்பந்தமான பிரதேசவாரியான ஒரு பகுதி நிரல்களும் இருக்கும்.

## நிபுணத்துவம் பெற்ற ஆலோசனை நிலையங்கள்

அறோ மாநிலத்தில் ஒரு குறிப்பிட்ட தலைப்பிலோ அல்லது எதாவது வாழ்க்கைப் பகுதியிலோ நிபுணத்துவம் பெற்றவர்களைக் கொண்ட ஆலோசனை நிலையங்களின் வசதிகள் பரந்து காணப்படுகிறது.
உதாரணத்திற்குச் சில: வயோதிபர்.தொழில் வதிவிட அனுமதி கல்வி திருமணம்ஃவிவாகரத்து வளர்ப்பு குடும்பம் நிதி (கடன் / திட்டமிடல் ) சுகாதாரம் வீட்டு வன்முறை உள்வாங்குதல் உளப்பிரச்சனைகள் சிசுக்கள் பராமரிப்பு பாலியல் அடிமையாதல் சமூகஉதவி சம்பந்தமான கேள்விகள் .இந்த வசதி வாய்ப்புகள் பிரதேசத்திற்கேற்றபடி மாறுபடும். ஒரு பிரதேசத்தில் ஒரு ஆலோசனை நிலையம் இல்லாவிடின் அநேகமாக ஒரு மத்திய ஆலோசனை நிலையம் அறோ அல்லது பாடனில் இருக்கும். முதல் ஆலோசனை வழக்கமாக இலவசமானது. ஒரு சில ஆலோசனை நிலையங்களின் தொடர்பு விபரங்கள் தனியான தலைப்புகளில் hallo-aargau.ch இல் காணலாம். Anlaufstelle Integrations Aargau AIA இலோ அன்றி வதியும் கிராமசபையிலோ பொருத்தமான ஆலோசனை நிலையங்களைத் தேடலாம்.
டொச் மொழி நன்றாகப் பேசத்தெரியாதவர்களுக்கு ஆலோசனை நிலையத்திற்குப் போக முன்பே மொழிபெயர்ப்பு வசதிகள் பற்றி தகவல் தருவார்கள். ஆலோசனை வேறு மொழிகளில் தரப்படலாம். அன்றி மொழிபெயர்ப்பாளரை ஒழுங்கு செய்து தரப்படலாம். அல்லது சொந்தமாக ஒரு மொழிபெயர்ப்பாளரை அழைத்துவரச் சொல்லலாம்

## வரையறையற்ற சட்ட ஆலோசனை

அறோ மாநிலப் பணிப்பின் பெயரில் நடத்தப்படும் அறோ வழக்கறிஞர்கள் சங்கத்தின் (Aargauischer Anwaltsverband) சட்ட ஆலோசனை நிலையங்களாகும். இங்கு குடியிருப்பவர்களின் சட்டரீதியான கேள்விகளுக்கு (குறுகிய ஆலோசனை) கட்டணமில்லை. 11 வேறுபட்ட பிரதேசங்களிலும் ஒழுங்கான இடைவெளிகளில் இந்தப் பேச்சு நேரம் அமைக்கப் பட்டிருக்கும். இதை இணையத்தளத்தில் பார்த்தோ அன்றி வதியும் கிராமசபையில் கேட்டோ அறிந்து கொள்ளலாம். இங்கு தொலைபேசி மற்றும் எழுத்து மூலமான கேள்விகளுக்குப் பதில் கிடையாதபடியால் நேரில் சென்று கேள்விகளைக் கேட்கவேண்டும். கூடுதலாக இன்னும் வேறு இடங்களிலும் வேறுவகையான தலைப்புகளில் (தொழில் வாழ்க்கை கணவன் மனைவி /குடும்பம்) உதாரணத்திற்குத் தொழிற்சங்கங்களில் இலவசமான சட்ட ஆலோசனைகளைப் பெறலாம். இந்த ஆலோசனைகளுக்கு அதிக நேரம் எடுத்துக்கொள்ளுமானால் வழக்கமாகக் கட்டணத்திற்குரியது. Anlaufstelle Integration Aargau AIA வினால் நடத்தப்படும் தனிப்பட்ட தலைப்புகளுக்குரிய நிலையங்களைப் பற்றிய தகவல்களை hallo-aargau.ch இல் அறியலாம்.

## துவேச அவமதிப்பு

அறோ மாநிலப் பணிப்பின் பெயரில் நடத்தப்படும் Anlaufstelle Integration Aargau AIA துவேச அவமதிப்பிற்குள்ளானோருக்குரிய ஒரு சுதந்திரமான ஆலோசனை நிலையமாகும். இங்கு வழங்கப்படும் ஆலோசனை நம்பகமானதும் அறோ மாநில வாழ் மக்களுக்கு இலவசமானதும் ஆகும். அதைவிட தொலைபேசியில் தனிப்பட்ட உரையாடல்கள் மூலம் ஆலோசனைகளும் பெறலாம்.

## மேலதிகத் தகவல்கள் (இணைப்புகள், விலாசம், பிரசுரம், அறிவித்தல்)

dev.hallo-aargau.ch/ta/emergencies-and-counselling-services/counselling-services